படித்ததில் பிடித்தது!

(மனைவி ஊருக்குப் போயிருந்தபோது ஒருவர் எழுதிய கவிதை...!)

## **"தவிப்பு...."**

💝வருடத்திற்கு ஒரு முறை
இரண்டு வாரம்
தாய் வீடு போகிறாய்...!
நீயும்
பிள்ளைகள் இல்லாமல்,
பொலிவிழந்து களையிழந்து
காணப்படுகிறது வீடு...!

💝காபி போட அடுப்பில்
பால் வைத்தால் பாதி
பொங்கி வழிந்து விடுகிறது..!
வீட்டைப் பெருக்கிய
இரண்டு நாட்களில்
இடுப்பும் முட்டியும் வலிக்கிறது...!

செலவிற்குப் பயந்து
சமைக்க ஆரம்பித்தால்
உப்பு போட மறந்து விடுகிறது..!

💝இரு மடங்கு விலை வைத்தும்
சொத்தைக் காய்கறிகளை பழங்களை
தலையில் கட்டி விடுகிறார் வண்டிக்காரர்...!

முரட்டுத்தனமாய் அடித்து
கசக்கிப் பிழிந்து துவைத்தால்
கிழிந்து விடுகிறது துணி...!

❤தண்ணீர் மோட்டார் டி வி
போட்டால் அணைக்காமல்
தூங்கி விடுகிறேன்...!

கதவைப் பூட்டாமலேயே
சமயலறை எரிவாயுவை
அணைக்காமலேயே
வெளியில் கிளம்பி விடுகிறேன்..!

தயிருக்கும் இட்லி மாவிற்கும்
வேறுபாடு தெரியவில்லை..!

❤இப்படியாகத் தனிமையில்
தவித்துப் போனாலும்
நீ வந்தவுடன்,
கூசாமல் பொய் சொல்கிறேன்...!

“இன்னும் ஒரு வாரம்
இருந்து விட்டு வரலாமே...
நான் ஜாலியாக இருக்கிறேன்...”
என்று...! ==0==